மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 142/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செல்லம்மாள் | நாள் | 24.07.2023 |
| தகப்பனார் பெயர் | சுப்ரமணியம் | | |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

18) பிரதிவாதி வீட்டிற்கு மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய இடங்களில் காம்பவுண்ட் சுவர்கள் உள்ளது என்றால், மேற்கிலும், தெற்கிலும் உள்ளது. ஆனால் கிழக்கில் காம்பவுண்ட் சுவர் இல்லை.

19) என் வீட்டிற்கு கிழக்கு புறம் வசிக்கும் ஜானகி, ரத்னா ஆகியோரது வீட்டின் கழிவு நீர் எந்த புறமாக செல்கிறது என்றால், மேற்படி நபர்களின் வீட்டிற்கு கிழக்குபுறமாக பைப் வழியாக பாதாள சாக்கடைக்கு செல்கிறது.

20) என் வீட்டிற்கு வெளியே தென்வடலாக செல்லும் சந்து சிறிது தூரம் சென்று கிழக்காக திரும்பி பாதாள சாக்கடையை கடந்து மெயின் ரோட்டை அடைகிறது என்றால், சரிதான்.

21) பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்குபுறமும், தெற்குபுறமும் காம்பவுண்ட் சுவர் உள்ளதாக நான் சொல்லும் நிலையில், மேற்படி காம்பவுண்ட் சுவர் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது என்றால், வருடம் எனக்கு சரியாக தெரியவில்லை. ஆனால் சுமார் 20 வருடங்கள் இருக்கும்.

22) பிரதிவாதியின் வீட்டிற்கு தென்புறமுள்ள மாரியம்மாள் மற்றும் சரவணன் ஆகியோர்களது வீட்டிற்கு வடபுறம் சந்து விட்டு வீடு கட்டியுள்ளனர் என்றால், இல்லை. அவர்கள் அவ்வாறு சந்து எதுவும் விடவில்லை. மேற்படி சரவணன் தற்போது பழைய வீட்டை இடித்துவிட்டு புதிய வீடு கட்டி வருகிறார் என்றால், சரிதான்.

23) 1989ம் வருடத்தில் இவ்வழக்கின் பிரதிவாதி மற்றும் அந்த பகுதியில் வசிக்கும் சுலோச்சனா, சகுந்தால், செம்பண்ணன், தெய்வாணை, சுப்ரமணி, கண்ணுபிள்ளை,

பார்வதியாம்மாள், கந்தசாமி, மாதம்மாள், அய்யம்மாள், பார்வதி, தாயம்மாள் ஆகியோர்கள் தங்களுக்கு பாதாள சாக்கடை அமைக்க கோரி நகராட்சிக்கு விண்ணப்பித்து அதன்பேரில் நகராட்சியால் பாதாள சாக்கடை அமைக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி பாதாள சாக்கடை அமைப்பதற்கு அவர்களுடன் சேர்ந்து நானும் தான் மனு அளித்தேன்.

24) நான் சொல்வது பொய்யானது என்றாலும், நான் மேற்படி நபர்களுடன் சேர்ந்து நகராட்சிக்கு மனு எதுவும் அளிக்கவில்லை என்றாலும், அவ்வாறு மனு அளித்ததாக தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. 1989ம் ஆண்டில் மேற்படி பிரதிவாதி நான் மேற்படி பாதாள சாக்கடை அமைக்கும் மனுவில் சேரக்கூடாது என தடுத்துவிட்டார். அதற்கு பின் நான் தனியாக மனு ஏதும் நகராட்சிக்கு அளித்தேனா என்றால், இல்லை. அதற்கு பின்னிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன்.

25) பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கு மற்றும் தெற்குபுறம் அமைந்துள்ள காம்பவுண்ட் சுவற்றை ஒட்டி பராமரிப்பிற்காக 1–1/2 அடி அகலத்தில் அவர் விட்டிருந்த மேற்படி காலி இடத்தையும் சேர்த்து அவர் காம்பவுண்ட் சுவர் எழுப்பி அடைத்துவிட்டார் என்றால், மேற்படி சந்தை பிரதிவாதியும், மாரியம்மாளும் சேர்ந்து அடைத்துவிட்டனர். மேற்படி சந்து எனக்கு பாத்தியப்பட்ட சந்து.

26) அவ்வாறு மேற்படி சந்து அடைக்கப்பட்டு சுமார் 20 வருடங்கள் இருக்கும். அவ்வாறு 20 வருடங்களுக்கு முன்பு மேற்படி சந்து அடைக்கப்பட்டு விட்ட நிலையில் அது தொடர்பாக நான் ஏதேனும் சட்டப்படியான நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால், மேற்படி சந்தின் நிலத்திற்கு அடியில் கழிவுநீர் சாக்கடை செல்வதாலும், மேற்படி சந்திற்கு மேல் எங்கள் வீட்டை ஒட்டி குடிநீர் இணைப்பு செல்வதாலும், மேற்படி சந்தை நான் நடைபாதையாக பயன்படுத்தாததாலும் அப்போது அதுகுறித்து நான் கண்டுகொள்ளவில்லை.

27) நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி சந்து பிரதிவாதிக்கு சொந்தமானது

என்றாலும், அதில் என் வீட்டுக்கு தொடர்புடைய எந்த குடிநீர் இணைப்புகளோ, பாதாள கழிவுநீர் குழாய்களோ செல்லவில்லை என்றாலும், பிரதிவாதியின் வீட்டிற்கு செல்லும் குடிநீர் இணைப்புகள் தான் மேற்படி சந்தின் வழியாக செல்கிறது என்றாலும், சரியல்ல.

28) நான் வசித்து வரும் வீடு அமைந்துள்ள 600 சதுரடி அளவுள்ள நிலத்தை சுமார் 35 வருடங்களுக்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்துதான் வீடு கட்டினேன் என்றால், அந்த பகுதியில் உள்ள அனைவரும் அவ்வாறுதான் கட்டினோம். முதலில் கூரை வீடுதான் இருந்தது.

29) என் வீட்டிற்கு வரும் மின் இணைப்பானது மேற்படி என் வீட்டிற்கு மேற்குபுறம் அமைந்துள்ள மாரியம்மாள் வீட்டின் வழியாகத்தான் வருகிறது என்றால், சரியல்ல. சுமார் 20 ஆண்டுகளாக மேற்படி மாரியம்மாளுக்கும், எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால், சரியல்ல.

30) நான் சொல்வது பொய்யானது என்றாலும், என் வீட்டிற்கு முதலில் மேற்படி மாரியம்மாள் வீட்டிற்கு வழியாகத்தான் மின் இணைப்பு வந்தது என்றும், பிறகு எனக்கும், மாரியம்மாளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், மேற்படி மாரியம்மாள் தன் வீட்டின் வழியாக மின் இணைப்பு வருவதற்கு ஆட்சேபனை செய்ததால், கடந்த 2005 ம் ஆண்டில் என் வீட்டிற்கு பிரதிவாதியின் மேற்படி சந்தின் வழியாக மாற்று மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றால், சரியல்ல.

31) என் வீட்டிற்கு மேற்குபுறம் நான் காலி நிலம் ஏதேனும் விட்டுள்ளேனா என்றால், இல்லை. முதலில் மதில்சுவர் எழுப்பிவிட்டு அதன்பிறகு வீடு கட்டினேன். அவ்வாறு வீடு கட்டியபோது கிழக்குபுறம் வாசல் வைத்து வீடு கட்டினேன் என்றால், சரிதான்.

32) என் மகள் தேவகி தற்போது எங்க வசிக்கிறார் என்றால், ஆண்டிக்வுண்டர் நகரில் வசிக்கிறார். கடந்த 25.01.2014 ம் தேதியில் நான் வசித்து வரும் சொத்தை பொறுத்து என் மகள் தேவகிக்கு ஒரு பதிவு செய்யப்படாத தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட்

ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்திற்குரிய வரிகள் என் மகள் பெயரில் போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால், குடிநீர் கட்டணம், மின் கட்டணம் ஆகியவை என் பெயரில்தான் செலுத்தப்படுகிறது.

33) மேற்படி பத்திரத்தில் ஒரு சாட்சியாக இந்த பிரதிவாதி கையெழுத்திட்டுள்ளார் என்றால், சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.